**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 63/2025 |
| Deposition of Witness | : | PW– 6 |
| Name | : | ஞானப்பிரகாசம் |
| Father Name | : | சரவணமுத்து |
| Village | : | கோபிசெட்டிபாளையம் |
| Taluk | : | ஈரோடு |
| Age | : | 50 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21.08.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 01.12.2024 ஆம் தேதியன்று மதியம் 15.00 மணிக்கு வெள்ளகோவில் காவல் நிலைய தலைமைக் காவலர் 805 திரு.முத்துக்கருப்பன் நிலைய அலுவலில் இருந்தபோது ஈரோடு, தாண்டாம்பாளையம், சிவலிங்கபுரத்தைச் சேர்ந்த முத்துச்சாமி மகன் கார்த்திக் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரினைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப வெள்ளகோவில் காவல் நிலையக் குற்ற எண். 496/2024 – U/S: 281, 125(a) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு.குமார் அவர்கள் பார்வைக்கு வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் திரு.குமார் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 01.12.2024 ஆம் தேதியன்று மதியம்

16.00 மணிக்கு சம்பவ இடத்தை ஆஜர் சாட்சிகள் குப்புச்சாமி மற்றும் மூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் கடந்த 01.12.2024 ஆம் தேதியன்று இவ்வழக்கின் சாட்சி கார்த்திக், சுப்பிரமணி, தங்கமணி, மகேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர், கடந்த 02.12.2024 ஆம் தேதி மதியம் 14.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி முருகேஷன் என்பவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6. பின்னர் கடந்த 17.12.2024 ஆம் தேதியன்று ஈரோடு கேஎம்சிஎச் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் மேல்சிகிச்சைக்காக பெருந்துறை ஈரோடு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் 20.12.2024 ஆம் தேதியன்று இறப்பு இண்டிமேசன் பெற்று அதிகாலை 01.30 மணிக்கு இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 281, 125(a) BNS வில் இருந்து 281, 106(1) BNS ஆக சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. பின்னர் 20.12.2024 ஆம் தேதியன்று சாட்சிகள் லோகாம்பாள், வனிதா, சித்ரா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் சாட்சியான கார்த்திக், சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

8. பின்னர் கடந்த 20.12.2024 ஆம் தேதியன்று ஈரோடு அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனை, பெருந்துறை சவக்கிடங்கிற்கு சென்று வழக்கில் இறந்துபோன

முத்துச்சாமி என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு ஆஜர் பஞ்சாயத்துகாரர்களுக்கும் சாட்சிகளுக்கும் முறைப்படி சம்மன் சார்வு செய்து சவக்கிடங்கிற்கு முன்பாக வைத்து காலை 9.30 மணியில் இருந்து காலை 11.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்னர் சாட்சிகள் தட்சணமூர்த்தி, தினகரன், பழனிச்சாமி, சக்திவேல், குமாரவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இறந்துபோன முத்துச்சாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனைக்காக தலைமைக் காவலர் 745. பாலகுரு என்பவர் மூலமாக மதியம் 01.05 மணிக்கு பெருந்துறை அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் தக்க வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜர்படுத்தியும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். **(இறந்துபோன முத்துச்சாமி என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

9. இவ்வழக்கில் கடந்த 02.12.2024 ஆம் தேதியன்று விபத்தை ஏற்படுத்திய TN 39 N 0338 என்ற பதிவு எண் கொண்ட Ashok Lyland பேருந்து மற்றும் விபத்திற்குள்ளான மற்றொரு வாகனமான TN 33 BM 9338 என்ற பதிவு எண் கொண்ட TVS XL 100 இருசக்கர வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இவ்வழக்கு கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. ஞானப்பிரகாசம் ஆகிய எனது பார்வைக்கு வைத்தார்.

10. பின்னர் இவ்வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளராகி நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 01.02.2025 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்றுகள் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 39 N 0338 என்ற பதிவு எண் கொண்ட Ashok Lyland பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், TVS XL 100 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

11. பின்னர் கடந்த 01.02.2025 ஆம் தேதியன்று கிளை மேலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் காங்கேயம் திரு.கௌதமன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(முருகேஷனின் பணி நியமன சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும், அன்றைய தினமே இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட முத்துச்சாமி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து, மேல் சிகிச்சைக்கு அனுப்பிவைத்த காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் சூர்ய லட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு விபத்து பதிவேடு நகல் பெற்றேன். பின்னர் காயம்பட்ட முத்துச்சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு கேஎம்சிகெச் மருத்துவமனை மருத்துவர் திரு.ஜான்குருபாதம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முத்துச்சாமி என்பவரின் இறப்பு இண்டிமேசன் வழங்கிய ஈரோடு அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.சந்திரமோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், முத்துச்சாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டு பிரேத பரிசோதனை சான்று வழங்கிய ஈரோடு அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.அம்சநித்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **(காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் சூர்ய லட்சுமி என்பவர் வழங்கிய முத்துச்சாமி என்பவரின் விபத்துப் பதிவேடு நகல் அ.சா.ஆ.10 ஆகவும், ஈரோடு அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் வழங்கிய முத்துச்சாமியின் பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

12. பின்னர் 01.02.2025 ஆம் தேதி பிரேத வழிக்காவல் மேற்கொண்ட தலைமைக் காவலர் 745 திரு.பாலகுரு மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் 805 திரு. முத்துக்கருப்பன் மற்றும் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 281, 106(1) BNS ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றவரின் ஓட்டுநர் உரிமத்தை ஆஜர்படுத்தவில்லை என்றால் சரிதான். பேருந்தின் பின் இடதுபகுதியில் மோதியதாக எங்களிடம் புகார் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டிச்சென்று பேருந்தின் பின் இடது பகுதியில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.21 18:25:31 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்